RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1319

# செவ்விலக்கியத் திணைக்கோட்பாட்டில் 'ஊர்': ஐங்குறுநூற்றை முன்வைத்து

**மு. முனீஸ்மூர்த்தி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# 'Ur (Town)' in the classical theory of Thinai: Based on Aingurunooru

**M. Munees Moorthy [a, *]**

[a] Department of Tamil, Bishop Heber College, Tiruchirappalli–620017, Tamil Nadu, India

* Corresponding Author: moovendhan1887@gmail.com

Received: 30-05-2022
Revised: 20-07-2022
Accepted: 23-08-2022
Published: 21-11-2022

Check for updates

**ABSTRACT**

The land is the basis for the survival of life. Therefore, the ancient Tamil poets and the ancient Tamil grammarians gave more importance to the land in the functions of creation and grammar. It is worth noting here that in the three-subjects distinction between the ecological and moral symbolism of human life (the triad of the first, thematic, and the object), the land and time are the primary objects. The strategies adopted by classical Tamil poets to place internal and external emotions as poems are essentially very important and should be identified separately. In particular, the poets who have written the Agam songs have inculcated in their minds the idea of Thinai theory (land, time, natural resources, etc.). One of the classical books in Tamil is Aingurunooru. The poets who have composed the chapters in this book, which have been planned and recited in five categories, have also composed poems with the names of the towns. The poets have composed the poems with a good understanding of the Thinai. Poets have given a significant place to the land (the habitat) in the singing of nature. This character can be seen in Aingurunooru. We can also take this as a general theoretical concept for the Sangam Classical texts on the place name post, like Orupanai chothukku is oru choru padham (for the entire pot, it is enough to test the single grain for the desired level of cooking).

**Keywords:** Classical Tamil, Classical Tamil poets, landmark, Thinai Concept.

## முன்னுரை

மண்ணுலகில் நிலைபெற்ற உயிர்களின் வாழ்வானது பொருள்பொதிந்த ஒன்றாகும். ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்கள், தாம் வாழ்ந்ததற்கான அடையாளமாக ஏதேனும் ஒன்றை இம்மண்ணுலகில் இட்டுச் செல்லுதல் இயல்பாகின்றது. அதேவேளை, அவை வெறும் சந்ததியை மட்டும் இம்மண்ணுலகிற்குத் தந்து செல்வதில்லை தம் இயல்பு, குணம் சார்ந்த ஏதேனும் ஒரு வாழ்க்கைப் பாடத்தை அடுத்த தலைமுறையினர்க்கு வழங்கியே செல்கின்றன. எனினும், மனிதர்கள் மட்டும் பிற உயிர்களிலிருந்து மாறுபட்டுத் தாம் வாழ்ந்ததற்கான அடையாளமாகத் தம் புகழையும் இம்மண்ணுலகில் நிலைநிறுத்திச் செல்கின்றனர்.

'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே'
'ஒருதாம் ஆகிய பெருமை யோரும்

தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே' (Seenivasan, 1997).

எனும் பதிவுகள் மேற்கருத்திற்குச் சான்று பகரும் தன்மையன.

பழந்தமிழகத்தில் நிலம், ஊர் பற்றிய நிலைப்பாடு அக்காலத் தமிழர்க்கு எவ்வாறு அமைந்திருந்தது என்பது பற்றிய புரிதல் இன்றைய நிலையில் தேவையான ஒன்றாகும். ஊர்ப்பெயர்களை இடம்பெறச் செய்ததற்கான காரணகாரியத்தைக் கண்டு வெளிப்படுத்தலும் தேவையான ஒன்றாகும். இதன்வழி, அக்காலத் தமிழர்தம் நிலவியல் எண்ணவோட்டத்தை ஒருவாறு விளங்கிக் கொள்ளலாம்.

அவ்வகையில், பழந்தமிழ் இலக்கிய நூல்களுள் ஒன்றான ஐங்குறுநூற்றில் பதிவாகியுள்ள ஊர்ப்பெயர்களை வகைதொகைப்படுத்தி, அவற்றை அந்நூற்புலவர்கள் பதிவு செய்துள்ளதன் காரணகாரியத்தை விளக்க முனைகின்றது இந்த எழுத்துரை.

## திணைக்கோட்பாட்டில் ஊர்

தமிழ்மரபில் திணை என்பது மனித உயிர்களை மட்டுமின்றி அஃறிணை உள்ளிட்ட உயிர்களும் வாழ்வதற்கேற்ற நிலவியல் வாழ்க்கைச் சூழல்களை உள்ளடக்கிய பரந்துபட்ட ஒரு கூறு ஆகும்.

“மனிதர்கள் வாழ்வதற்கான சூழலமைவைக் கொண்டது நிலமாகும். பனிப் பிரதேசங்களில் மனிதர்கள் வாழ இயலாமைக்கு அங்கு நிலமின்மையே காரணமாகக் கொள்ளலாம். நிலத்தோடு கொள்கிற உறவே அறிவாக உருவாக்கம் பெறுகின்றது என்பர். இயற்கையின் மீது மனிதன் தன் ஆற்றலை செயல்படுத்தும் போது நிலமானது உயிர்ப்பினை அடைகிறது. நிலத்தைத் தன் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு மனிதன் செயல்பட்டாலும் மனிதனை நிலமே ஆள்கிறது. மனிதனை அடையாளப்படுத்தும் நிலமே அவனுக்கான கலைகளையும் கற்றுத் தருகிறது. இயற்கையிலிருந்தே தம் பாடத்தை கற்றுக் கொண்டு மனிதர்கள் கலைஞர்களாகவும் உருமாறுகின்றனர். நிலத்திற்கும் கலைகளுக்கும் இடையிலான உறவுப் பிணைப்பாக மனிதர்களின் செயல்பாடுகள் காணப்படுகின்றன. எனவே மனிதனின் கலை, அறிவு அனைத்திற்கும் நிலமே காரணமாக அமைகிறது” (Muthulakshmi, 2020).

“மனிதர்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய நிலத்தின் வெளியாகிய இயற்கைச் சூழலே திணைக் கோட்பாட்டிற்கு அடிப்படைக் காரணமாகத் திகழ்கின்றது. தமிழ் இலக்கியங்கள் சுட்டும் திணைநிலக் கோட்பாடு ஒரே சமயத்தில் இலக்கிய இலக்கண ஆசிரியர்களால் உருவானதன்று. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து திணையாகிய நிலங்களுக்கும் தமிழர் நாகரிக வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமூக வரலாற்றிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. தொடக்கத்தில் மலைகளில் தொடங்கிய ஆதித் தமிழர்களின் வாழ்க்கை வேட்டையோடும் கூடியுண்ணலோடும் தொடர்புடையதாயிருந்து, இது குறிஞ்சித் திணை வாழ்க்கை. காலப்போக்கில் பல்லாயிரம் ஆண்டுக்கால இடைவெளிகளில் மலைகளில் வாழ்ந்த கூட்டத்தின் ஒருபிரிவு இடநெருக்கடி காரணமாகவோ வேறு காரணங்களாலோ மலையிருந்து கீழிறங்கி மலைச் சாரல்களில், காடுகளில் வாழ்க்கைத் தொடங்கியிருக்க வேண்டும். இந்தக் காடு சார்ந்த முல்லைத் திணை வாழ்க்கையில் மனிதன் விலங்குகளைப் பழக்கப்படுத்தி வளர்க்கத் தொடங்கியதன் வாயிலாக ஆநிரை வளர்ப்புச் சமூகம் உருவாகியிருக்க வேண்டும். இதே காலகட்டத்தில் அவர்கள் வன்புல விவசாயத்தைக் கற்றிருக்க வேண்டும் மீண்டும் பல்லாயிரம் ஆண்டுக்கால இடைவெளிகளில் ஒருபிரிவினர் காடுகளிலிருந்து இடம்பெயர்ந்து சமவெளி களையும் ஆற்றங்கரைகளையும் நாடி வாழத் தொடங்கியபோது மென்புல விவசாயத்தை மேற்கொண்டிருக்க வேண்டும், இதுவே மருதத் திண வாழ்க்கை. மருதத்திணை வாழ்க்கையில் மென்புல விவசாயம் தந்த உபரி உற்பத்தி, வளமான வாழ்க்கை அடுத்த தேடலுக்கு வழிவகுத்திருக்க வேண்டும் காலம் செல்லச் செல்லப் பெருங்கடல் குறித்த அச்சம் விலகி கடற்கரை வாழ்க்கையும் ஆழ்கடல் மீன்பிடிப்பும் உப்பு உற்பத்தியும் தொடங்கியிருக்கும். இந்த கடற்கரையும் வணிக நாகரிகமும் நெய்தல் திணை வாழ்க்கையாக அமைந்திருக்க வேண்டும்.”

(இங்கே, பாலைத்திணை ஒரு புதிர். தமிழ்ச் சமூக வரலாற்றில் பாலைத் திணைநிலக்கான இடம் யாது என்ற ஐயத்திற்குச் சிலப்பதிகாரம் அளிக்கும் விடை,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து

நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

குறிஞ்சி, முல்லைத் திணைநிலங்கள் இயற்கை மாற்றங்களால் பலகாலம் மழையின்றி வறண்டு உருமாறிச் சிதையும் காலங்களில் பாலைநிலமாக மாற்றம் பெறும். நிலம் மழையின்றி வறண்டால் வாழும் மக்களின் வாழ்க்கையும் தடம்புரளும் பாலைத்திணை வாழ்க்கையும் அவ்வாறே) எனவே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணை வாழ்க்கையும் தமிழ்ச் சமூகத்தின் சமூக வரலாற்றுப் பதிவுகளாக அமைந்திருப்பது சிறப்பு. சங்க அகப்புற இலக்கியங்களும் தொல்காப்பியமும் இந்தத் திணைநில வாழ்க்கையை இலக்கியத்தின் பாடுபொருளாகவும் இலக்கிய படைப்பாக்கக் கோட்பாடுகளாகவும் வரித்துக் கொண்டன (Ilangovan, 2019).

எனக் குறிப்பிடும் சிந்தனைகள் இங்கு முதன்மையான ஒன்றாகும். இங்குச் சுட்டப்பெறும் திணை என்பது பல்வேறு அடையாளங்களைத் தன்னுள்ளடக்கிய ஒரு கலைச்சொல்லாகும். திணை வகைமையுள் அடங்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியனவற்றுள் முதற்பொருள் என்பன நிலமும் (குடியிருப்பு), பொழுதும் (காலம்) ஆகியனவாகும். அவற்றுள்ளும் முதன்மை பெறுவது நிலமே.

இனம், மொழி, தொழில், ஆளுமை உள்ளிட்ட ஏதேனும் ஓர் அடையாளத்துடன் ஒன்றுக்கும் மேற்பட்ட குடிகள் சேர்ந்து வாழும் நிலப்பரப்பைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் மொழிக் குறியீடே ஊர் என்பதாகும்.

## ஊர்ப்பெயராய்வு - தேவை தானா?

மண்ணில் வாழும் மனிதர்க்குத் தன் வரலாறு எவ்வளவு முதன்மையானதோ அதுபோலவே, தான் வாழும் ஊரின், நிலத்தின் வரலாறு, அடையாளப் பின்னணியை அறிந்து கொள்ளுதலும். வரலாற்றுணர்வு இல்லாத மனித சமூகம் அடையாளமிழந்து தேய்வதே வரலாறு உணர்த்தும் உண்மையாகும். எனவே, அறிவியல் அடிப்படையிலான முற்போக்குத் தன்மையுடனும் கடந்தகால வரலாற்றுணர்வுடனும் பயணித்தலே வாழ்வுக்கும் ஆய்வுக்கும் இன்றைய நிலையில் தேவையான ஒன்றாகின்றது.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் இறைநிலையோடு தொடர்புடைய ஊர்களை (தலங்களை) முன்னிறுத்திப் பக்தி இலக்கியப் பின்னணியுடன் தலபுராணங்கள் பல இயற்றப் பெற்றுள்ளமையும் இவ்விடத்தே சிந்தித்துப் பார்க்கத்தக்கது. இத்தகு தலபுராணங்களுள் அத்தலம் பற்றிய புராணக்கதைகளும் புனைவுகளும் மிகுதியெனினும் அவற்றுள் ஓரளவு வரலாற்றுக் குறிப்புகளும் உள்ளன என்பதனை மறுப்பதற்கில்லை.

“வாழ்க்கைக்குப் பல துறைகள் தேவை. அவற்றுள் ஆவி போன்றவை ஊரும் பேரும். ஊரும் பேரும் வாழ்க்கையை இயக்கி வளர்ப்பன என்று கூறல் மிகையாகாது. ஊர் பேரால் உலகம் இயங்கல் வெள்ளிடை மலை. ஊர் பேரே உலகம் வாழ்க்கை எல்லாம் எல்லாம்.

இப்பரந்த அழகிய உலகை என்னுள்ளே தொடர்புபடுத்தும் கருவி ஒன்றுள்ளது. அஃது உள்ளம். உள்ளம் ஓர் அகக்கரணம். அது, புலன்கள் வழியே தன் கடனை ஆற்றுகிறது. ஊர் பேர் இல்வழி உள்ளம் என் செய்யும்? அஃது எதனுடன் தொடர்பு கொள்ளும். எக்கடனை ஆற்றும்? ஊரும் பேரும் இல்லையேல் உள்ளம் உறங்கியே போகும். ஊரும் பேரும் உள்ள நிகழ்ச்சிக்கு இன்றியமையாதன.” என்று மனித வாழ்வின் அடையாளமாகத் திகழும் ஊரை, அவ்வூர்க்கான அடையாளப் பெயரை ‘தமிழகம் - ஊரும் பேரும்’ எனும் நூலுக்குத் தான் எழுதிய முகவுரைவழிச் சிறப்பித்துள்ளார் (Sethupillai, 2005).

## சங்க இலக்கியமும் ஊர்ப்பெயர்களும்

சங்க இலக்கியம் - புறப்பாடல்களில் நாட்டை ஆள்வோரின் இருப்பிட அடையாளம் தாங்கிய நிலையிலும் போர்முனைகளை மையமிட்ட நிலையிலும் வாணிக மையங்களை மையமிட்ட நிலையிலும் ஊர்ப்பெயர்கள் பதிவாகியுள்ளதனை ஊர்ப்பெயராய்வுகள் அடையாளப்படுத்தியுள்ளன. அகப்பாடல்களில் பெரும்பான்மையாக நாட்டுவளம் குறிக்க உவமை நிலையில் ஊர்ப்பெயர்கள் பதிவாகியுள்ளதனை ஊர்ப்பெயராய்வுகள் அடையாளப்படுத்தியுள்ளன.

தவிர, அஞ்சில் ஆந்தையார், அள்ளூர் நன்முல்லையார், ஆமூர் மல்லன், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், ஒக்கூர் மாசாத்தியார், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் என்பன போன்று புலவர் / குறுநில மன்னர் / பெருவேந்தர் பெயர்களின் அடைகளாக ஊர்ப்பெயர்கள் வழங்கப்பெற்று வருவதனை வரலாற்றுவழிக் காண முடிகின்றது.

சங்க அகநூல்களுள் ஒன்றான ஐங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ள ஊர்ப்பெயர்ப் பதிவுகளின் பினபுலத்தை அணுகுகின்றது இனிவரும் பகுதி.

## ஐங்குறுநூற்றில் ஊர்கள்

சங்க அகப்பாடல்களில் அகநானூற்றில்தான் மிகுதியான ஊர்ப்பெயர்ப் பதிவுகளைக் காண முடிகின்றது. எனினும், குறைந்த அடிகளையுடைய ஐங்குறுநூற்றிலும் குறிப்பிடத்தக்க அளவில் ஊர்ப்பெயர்ப் பதிவுகளைக் காண முடிகின்றது. விவரம் வருமாறு:

"திண்டேர்த் தென்னவன் நன்னாட்டு உள்ளதை
வேனில் ஆயினும் தண்புனல் ஒழுகும்
தேனூர் அன்னஇவள் தெரிவளை நெகிழ"
"கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்
தேர்வண் கோமான் தேனூர் அன்னஇவள்
நல்லணி"
"பகலில் தோன்றும் பல்கதிர்த் தீயின்
ஆம்பலஞ் செறுவின் தேனூர் அன்ன
இவள்நலம்"
"பகல்கொள் விளக்கோடு இராநாள் அறியா
வெல்போர்ச் சோழர் ஆமூர் அன்னஇவள்
நலம்பெறு சுடர்நுதல்"
"விண்டு அன்ன வெண்ணெல் போர்வின்
கைவண் விராஅன் இருப்பை அன்ன
இவள்அணங்கு உற்றனை

"விராஅன் - ஓர் உபகாரி இவன் மலை விராலிமலை என்று வழங்குகின்றது இருப்பை அவனுடைய ஊர்" என்பார் (Kalyana Sundaraiyar, 1944)."

"நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்

கைவண் மத்தி கழாஅர் அன்ன

நல்லோர் நல்லோர் நாடி

வதுவை அயர விரும்புதி நீயே"

"திரைஇமிழ் இன்னிசை அளைஇ அயலது

முழவுஇமிழ் இன்னிசை மறுகுதொறும் இசைக்கும்

தொண்டி அன்ன பணைத்தோள்

ஒண்தொடி அரிவை"

"வண்டிமிர் பனித்துறைத் தொண்டி"

"தொண்டித்

தண்ணறு நெய்தல்"

"அணங்குடைப் பனித்துறைத் தொண்டி அன்ன

மணங்கமழ் பொழில்"

"வாழியோ மடந்தை

தொண்டி அன்னநின் பண்புபல கொண்டே"

"தொண்டித்

தண்கமழ் புதுமலர் நாறும் ஒண்தொடி"

"முண்டக நறுமலர் கமழும்

தொண்டி யன்னோள் தோள்"

"குட்டுவன் தொண்டி யன்ன

என்கண்டு நயந்து"

"அலவன் தாக்கத் துறைஇறாப் பிறழும்

இன்னொலித் தொண்டி யற்றே

இவள்சிறு நுதலே"

"துறைகெழு தொண்டி அன்ன இவள்நலனே"

தவிர, ஊர்ப்பெயரைச் சுட்டாமல் பொதுநிலையில், பழமையான ஊர், சிறிய ஊர், மலைகள் சூழ்ந்த ஊர், இத்தகைய ஊரையுடைய தலைவன் என அகமாந்தர்களின் ஊர்களைக் குறிப்பிடும் பதிவுகளையும் ஐங்குறுநூற்றில் காண முடிகின்றது (Kalyana Sundaraiyar, 1944).

"கல்லகத் ததுஎம் ஊரே"

"அடுக்கல் நல்லூர் அசைநடைக் கொடிச்சி"

"அழுங்கல் மூதூர் அலர்எழ"

"கல்லென் சீறூர்"

"மிகப்பெரிது புலம்பின்று தோழிநம் ஊரே"

'சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறார்' என்பது அகமரபாதலின் அம்மரபையும் புலவர்களும் தொகுத்தோரும் கவனத்திற் கொண்டு செயலாற்றியுள்ளனர் என்பது புலனாகின்றது (Kaliyana Sundaraiyar, 1944).

## ஊர்ப்பெயர்ப் பதிவுகள் உணர்த்தும் செய்திகள்

அகநூலுள் ஒன்றான ஐங்குறுநூற்றில் ஊர்ப்பெயர்களைப் புலவர்கள் பதிவு செய்துள்ளதன் பின்புலங்களைப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

- அகமாந்தர்களது ஊரின் பெருமையை/பழமையை உணர்த்த
- அகமாந்தர்களது செல்வ வளம் குறிக்க
- அகமாந்தர்களது குடியிருப்பினைக் குறிப்பிட
- உவம நிலையில் அகமாந்தர்களின் பண்புநலனைப் பெருமைமிக்க ஊரோடு ஒப்பிட்டுக் கூற
- உவம நிலையில் அகமாந்தர்களின் அழகுநலனை வளம்மிக்க ஊரோடு ஒப்பிட்டுக் கூற
- நாட்டையாளும் மன்னனின் வளம்பொருந்திய ஊரை அடையாளப்படுத்திட
- இயற்கை எழில்வளம் சூழ்ந்த தன்மையைக் குறிப்பிட

மேலும், ஐங்குறுநூற்றில் ஊர்ப்பெயரை நேரடியாகக் குறிப்பிட்டுள்ள பதிவுகள் கவனத்திற்குரியவை. அதாவது, தேனூர், ஆமூர், கழாஅர், இருப்பை, தொண்டி எனும் ஊர்ப்பெயர் குறித்த பதிவுகள். இவ்வூர்கள் உவமை நிலையில்தான் பாடலுள் இடம்பெற்றுள்ளன. எனினும், அவை தலைவியின் அழகுநலனைப் / பண்புநலனைப் புலப்படுத்தவே உவமையாகப் புலவர்களால் கையாளப்பட்டுள்ளமை சிறப்பிற்கு உரியதாகும்.

"இயற்கைப் பொருட்களை அவை கிடந்தவாறு நோக்கி, அவற்றின் அழகை நுண்ணிதாக நுகரவல்லார், பெண்மை அழகைப் பெரிதும் விளக்க வல்லவராவர் (Govindhan, 2018)." என்று புலமையுடையோரின் இயற்கை நுகர்திறன் வெளிப்படும் பாங்கினைக் குறிப்பிடுவர்.

"உவமை என்பது கவிஞனின் அனுபவப் பொருளாகும். பொருள் என்பது அவன் காணும் புதிய பொருளாகும். அவன் ஏற்கனவே கண்டு வைத்த பொருளைப் புதிதாகக் காணும் பொருளோடு பொருத்திவைத்து அப்பொருளின் உயர்வு தாழ்வுகளை அளந்து அறிவிக்கின்றான் என்று கூறலாம்.பொதுவாகப் பொருளின் சிறப்பை வற்புறுத்தவே உவமை அமைக்கப்படுகிறது. அதன் உயர்வைக் காட்ட அதனினும் உயர்ந்த பொருளையே வரையறையாக அமைக்க வேண்டியுள்ளது." எனும் கருத்தையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது (Seenivasan, 1997).

## முடிவுரை

ஆக, மலை, ஞாயிறு, நிலவு, வான், மழை, தென்றல் உள்ளிட்ட உயர்பொருளினைப் பொருளுக்கு (உவமேயத்துக்கு) உவமையாகக் கூறிப் பாடல் புனைந்த புலவர்கள், அகமாந்தர்களின் அழகுநலனை/பண்புநலனை மிகுவிக்க வளம்மிக்க ஊர்களையும், நகரங்களையும் உவமையாக்கிப் பாடலைச் சிறப்பித்துள்ளனர். திணை பற்றிய புரிதலை நன்கு உள்வாங்கியே புலவர்கள் செய்யுள் செய்துள்ளனர். இயற்கையைப் பாடுதலில் நிலத்துக்கும் குறிப்பிட்ட முதன்மையைப் புலவர்கள் வழங்கியுள்ளனர். இத்தன்மையையே ஐங்குறுநூற்றில் காண முடிகின்றது. ஒருபானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம் எனுமாறு போல, ஊர்ப்பெயர் இடுகை பற்றிய சங்கச் செவ்வியல் நூல்களுக்கான பொதுமைக் கோட்பாட்டுக் கருத்தியலாகவும் நாம் இதனைக் கொள்ளலாம்.

## References


Govindhan, K. (2018) Aariyarkku Murpatta Thamil Panpadu, Ramayya Publications, Chennai, India.

Ilangovan N. (2019) Nattupura Ilakkiyamum Thinaik Kotpadum, Tagore Government Arts College, Puducheery, India.

Kaliyana Sundaraiyar, S. (1944) Aingurunuru Moolamum Uraiyum, Kabheer Press, Chennai, India.

Muthulakshmi, A., (2020) Nilam – Kalai Cheyalpadukalin Iyangu Thalam, Ilakkiyathil Nilam Mozhi Adaiyalangal, Arul Anandhar College, Madurai, India.

Seenivasan, (1997) Sanga Ilakkiyathil Uvamaigal, Aniyagam veliyeedu, Chennai, India.

Sethupillai, R.P. (2005) Thamizhagam – Oorum Perum, Pazhaniappa Brothers Publication, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License